பதிவு எண். ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ [illegible]: 1953 ★ [illegible] ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Naadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

[illegible]: இரா. செழியன் [illegible]

மலர்: 20] சென்னை: ஆனி 22 (5—7—72) புதன் | வெளியூர்: ஆனி 23 (6—7—72) வியாழன் [இதழ்: 18

தமிழகத்துக்கு மின்சாரம்—மைசூர் ஒப்புதல்

சென்னை, ஜூலை 5—
தமிழகத்திற்குத் தற்போதுள்ள மின்சாரப் பற்றுக்குறையைச் சமாளிக்கும் அளவில் மைசூர் மின்சாரம் அளிக்க ஒப்புக்கொண்டிருக்கிறது.

60 மெகாவாட் மின்சாரத்தை மைசூர் நேற்று வழங்கியது.

முதலில் கேரளத்திடம் தமிழ்நாடு மின்சாரம் கேட்டது; ஆனால் தன்னிடம் மின்சார இருப்புக் குறைவாக இருப்பதால் இன்னும் சிறிது காலத்திற்கு மின்சாரம் தர முடியாது என்று கேரளம் பதில் அளித்துவிட்டது.

சென்னையில் அர்த்தால் பிசுபிசுப்பு

தமிழகமெங்கும் சட்டம்—அமைதி நிலைநாட்டப்பட்டது

போராட்டத்துக்குப் பொதுமக்கள் ஆதரவு இல்லை

எல்லா ஊர்களிலும் வழக்கம்போல் அலுவல்கள் நடந்தன

சென்னை, ஜூலை 5—
'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரில், சுயநல அரசியல் நோக்குடன் எதிர்க் கட்சிகள் சேர்ந்து கூட்டாக அறிவித்திருந்த கடையடைப்பு வேலைநிறுத்தம் படுதோல்வியடைந்தது.

தமிழ்நாடு முழுவதும் 5—7—72 அன்று பெரிய 'அர்த்தால்' என்றும், 'பந்த்' என்றும், 'எந்த வேலையும் நடைபெறாது' என்றும், 'பஸ்—டாக்சி வண்டிகள் எதுவும் ஓடாது' என்றும் வாய்ப்பறை சாற்றிக்கொண்டிருந்தவர்கள் முகத்தில் கரியைப் பூசினார்கள்—பொதுமக்கள்!

தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் வழக்கம்போல் எல்லா அலுவலகங்களும் நடைபெற்றன.

'பந்த்' என்பதற்கோ, 'அர்த்தால்' என்பதற்கோ எந்த அறிகுறியும் தென்படவில்லை.

பஸ்கள்—டாக்சிகள்—ஆட்டோ ரிக்ஷாக்கள்—சைக்கிள் ரிக்ஷாக்கள் அனைத்தும் எவ்விதத் தடையுமின்றி காலையிலிருந்தே வழக்கம்போல் ஓடிக்கொண்டிருந்தன.

சென்னையின் இதய பாகமான அண்ணா சாலையிலும், சைனா பஜாரிலும் கடைகள் அனைத்தும் திறந்திருந்தன.

காலிகள் ஏதேனும் கலவரம் செய்து சேதம் விளைவிக்கக் கூடும் என்ற அச்சத்தில் இரண்டொரு கடைகள் அரைகுறையாக மூடப்பட்டிருந்தன; பிறகு அவைகளும் முழு அளவில் திறக்கப்பட்டுவிட்டன.

கல்வி நிலையங்களுக்கெல்லாம் விடுமுறையாகையால், அவைகள் திறக்கப்படவில்லை.

பாங்கிகள் மற்றும் ஏனைய வணிக நிறுவனங்கள் எல்லாம் வழக்கம்போல் திறந்திருந்தன.

சென்னை நகரில் மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் மற்ற நகரங்களிலும்கூட, கடைகள்—அலுவலகங்கள் வழக்கம்போல திறந்திருந்ததாகவும், அர்த்தால் பிசுபிசுத்ததாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

சென்னை நகரின் எல்லாப் பகுதிகளிலும் காவல் துறையினரும், ஊர்க்காவல் படையினரும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

சிற்சில இடங்களில் கடைகளை மூடும்படிச் சில காலிகள் கும்பலாக வந்து அச்சுறுத்தினர்; ஆனாலும் காவல் துறையினர் நிலைமையைச் சமாளித்தனர்.

ஓடிக்கொண்டிருந்த பஸ் வண்டிகள் மீது காலிகள் கல்லெறிந்து கலகம் விளைவிக்க முயன்றபோது, காவல் துறையினரால் அசம்பாவிதம் எதுவும் நடைபெறாமல் தடுத்து நிறுத்தப்பட்டது.

போராட்டக்காரர்கள் மீது பொதுமக்களுக்கு எவ்வித அனுதாபமும் இல்லை என்பதைத்தான் இன்றைய நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன.

ஆங்காங்கு வன்செயல்களில் ஈடுபட முயன்றவர்களைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

முதல்வர் வீட்டுமுன் மறியல் இல்லை

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வீட்டுமுன் மாணவர்கள் மறியல் நடக்கப்போவதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது; அதன்படி நேற்று முதலமைச்சர் வீட்டுமுன் யாரும் மறியல் செய்யவில்லை.

எதிர்க் கட்சிகளின் போராட்டச் செய்திகளெல்லாம் வெறும் பத்திரிகைச் செய்தியாகவே உள்ளன!

சென்னை, ஜூலை 5—
முதலமைச்சரின் கண் சிகிச்சை முகாம் நிதி நிர்வாகத்தில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக அதிகாரிகள் அல்லாதாரை உறுப்பினர்களாகக்கொண்ட ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி. மு. க. செயற்குழு—பொதுக்குழு கூட்டங்கள்

திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு—பொதுக் குழுக் கூட்டங்கள், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், ஜூலை 29, 30 சனி—ஞாயிறு ஆகிய நாட்களில் கோவை நகரில் நடைபெறும்.

'அறிவகம்'
சென்னை-13
5-7-1972

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி.மு.க.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

கல்கத்தாவில்....

புரட்சி நடிகருக்குப் பொன்னாடை

அண்ணா—கலைஞர்—எம். ஜி. ஆர். பெயர்களில் உள்ள தமிழ் அமைப்புகளின் பாராட்டு

இலவசத் தமிழ்ப் பள்ளிக்கு எம். ஜி. ஆர். நன்கொடை

கல்கத்தா, ஜூலை 5—
"ரிக்ஷாக்காரன்' படத்தில் என் நடிப்பிற்காக 1971-ம் ஆண்டின் சிறந்த நடிகருக்குரிய பரிசை எனக்கு அளித்ததன் மூலம் மத்திய அரசு தென்னாட்டுத் திரையுலகையே பெருமைப்படுத்தியிருக்கிறது"

என்று புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் கல்கத்தாவில் கூறினார்.

அறிஞர் அண்ணா தமிழ்ச் சங்கம்—மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்—டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றம் ஆகியவை கூட்டாக அளித்த பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'தென்னக நாடகத் துறைக் கலைஞர்கள் உட்பட எல்லா மக்களும், இந்தப் பரிசு தங்களில் ஒருவருக்குக் கிடைத்தது பற்றி பெருமிதமடைவர்; ஏனெனில், இது தென்னாட்டுத் திரையுலகுக்கு வழங்கப்பட்டுள்ள பரிசாகும்."

அறிஞர் அண்ணா—முத்துராமலிங்கத் தேவர் தமிழ் இலவசப் பள்ளிக்கு புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் ரூ. 2,000 நன்கொடை வழங்கினார். (கல்கத்தா மாநகரில் இது ஒன்றே ஒன்றுதான் தமிழ்ப் படிப்புச் சொல்லித் தரும் பள்ளி ஆகும்).

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம்—டாக்டர் கலைஞர் கருணாநிதி தமிழ் மன்றம் ஆகியவற்றுக்கு புரட்சி நடிகர்

எம். ஜி. ஆர். தலா ரூ. 1500 நன்கொடை வழங்கினார்.

இவ்விழாவில் மூன்று அமைப்புக்கள் சார்பில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது.

எம். ஜி. ஆருக்கு 'பாரத்' விருது

ஒரிசா முதலமைச்சர் தலைமையில் மேற்கு வங்க முதல்வர் வழங்கினார்

கல்கத்தா, ஜூலை 5—
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் நேற்று கல்கத்தாவில், அனைத்திந்திய சிறந்த நடிகருக்குரிய விருதையும்—பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

இந்த விழா, ஒரிசா முதலமைச்சர் திருமதி நந்தினி சதபதி தலைமையில் நடைபெற்றது.

மேற்கு வங்காள முதலமைச்சர் திரு. சித்தார்த்த சங்கர ரே பரிசுகளை வழங்கினார்.

சிறந்த நடிகருக்கு வழங்கப்படும் 'பாரத்' என்ற பட்டத்தையும்—பரிசையும் எம். ஜி. ஆர். பெற்றுக்கொண்டார்.

அனைத்திந்திய சிறந்த நடிகையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் இந்தி நடிகையும்—தமிழ்நாட்டைச் சேர்ந்தவருமான திருமதி வகிதா ரகிமான் 'ஊர்வசி' என்ற பட்டத்தையும்—பரிசையும் பெற்றார்.

மற்றும் சிறந்த கலைஞர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அனைவரும் வந்திருந்து பரிசுகளைப் பெற்றுக்கொண்டனர்.

தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு அனைத்துக்கும் மின் ஒளி

1974-க்குள் திட்டம் நிறைவேறிவிடும்

பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா தகவல்

சென்னை, ஜூலை 5—
"தமிழ் நாட்டிலுள்ள சுமார் 20,000 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளுக்கும் 1974 முடிவுக்குள் மின்சாரம் அளிக்கப்பட்டுவிடும்"

என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் நடைபெற்ற மாநில அமைச்சர்களின் மூன்று நாள் மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுச் சென்னை திரும்பிய அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது:—

"இவ்வாண்டு 5000 தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் மின்சாரம் அளிக்கத் தமிழ்நாடு அரசு ஏற்கனவே திட்டம் வகுத்துள்ளது.

"காவிரியாற்றுப் பாசன வசதியை நவீனப்படுத்தும் திட்டத்துக்கும், தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டத்திற்கும் உடனே அனுமதி வழங்க வேண்டுமென மத்திய அரசிடம் கோரியிருக்கிறோம்.

மின்சாரம் சம்பந்தமான திட்டங்களை வகுப்பதில் ஏற்படும் நெருக்கடி பற்றி ஆய்வு நடத்தக் குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்துள்ளது; தமிழ்நாட்டின் சார்பில் எஸ். ஜே. சாதிக் பாட்சா இந்தக் குழுவின் உறுப்பினராவார்; இதன் தலைவர் உ. பி. அமைச்சர் திவாரி ஆவார்.

கண்டறியாத சனநாயகத்தைக் கலைஞர் ஆட்சியில் கண்டேன்

இந்த அரசைக் காக்க கழகத்தின் இரு வண்ணக் கொடியேந்தவும் தயார்

சிலம்புச்செல்வர் ம. பொ. சி. முழக்கம்

சென்னை ஜூலை 4--

"சனநாயக முறை வழுவாமல் இந்த அரசை நடத்துகின்ற தி. மு. கழக அரசுக்கு -- அவர்களோடு நாங்கள் கொண்டிருக்கின்ற தோழமைக்கு யார் ஊறு விளைவிக்க நினைத்தாலும சரி -- கலைஞர் அரசைக் காப்பாற்ற தி. மு. கழகத்துடன் இணைந்து நின்று, தி. மு. கழகத்தின் கருப்பும் -- சிவப்பும் கலந்த கொடியைப் பிடித்துப் போராடவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்"

என்று தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள், சென்னையில் நடந்த கொள்கை விளக்கப் பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்; அவர் ஆற்றிய உரை வருமாறு :--

"நான் முன்பு இருந்த காங்கிரசுக் கட்சி -- எனக்குப் பின்னல் விளையகம் இருந்துவிட்டு வந்த காங்கிரக் கட்சி -- ஆட்சியில் இருந்தபோது இப்படிப்பட்ட பே ராட்டங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன; வடக்கு எல்லைப் போராட்டம் -- தெற்கு எல்லைப் போராட்டம் -- தட்சிணப் பிரதேச இணைப்புப் போராட்டம் ஆகியவைகள் நடந்தன; அப்போதிருந்த ஆட்சி இப்படி ஒரு கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடத்தியதில்லை; காரணம், அவர்கள் மக்களை நம்பவில்லை -- போலீசை நம்பினார்கள்; 1965-ல் விமானத்தில் இராணுவத்தினரையேகொண்டு வந்து இறக்கினார்கள் -- சுட்டார்கள்.

நாம், மக்களை நம்புகிறோம்; கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம் நடத்துகிறோம்; போலீசையும் -- இராணுவத்தையும் நம்பி இந்த ஆட்சி நடக்கவில்லை; மக்களை நம்பித்தான் நடக்கிறது.

சுயாட்சி கேட்கும் சொரணை உடையவர்களாகிய நாம் நடத்துவதல்லவா சனநாயகம்!

இத்தனை வயதில் நான் காணாத சனநாயகத்தை வயது குறைந்த முதல்வர் கலைஞர் நடத்தும் ஆட்சியில்தான் பார்க்கிறேன்.

'இந்த அரசை எப்படியாவது கவிழ்த்துவிட வேண்டும்' என்ற நினைப்பில்தான் அவர்கள் மக்களைத் தூண்டிவிடுகிறார்கள்; இதில் அவர்கள் வெற்றி பெற முடியாது என்பதால்தான், தூண்டிவிடுகிறவர்கள் இந்தப் போராட்டத்தில் நேரில் கலந்து கொள்ளவில்லை!

காமராசரோ -- பக்தவத்சலமோ -- அந்தத் தொண்ணூறு வயது இளைஞரோ தேதி குறித்துப் போராடப் புறப்படட்டும் பார்க்கலாம்; அவர்களுக்குத் தைரியம் இல்லை; காரணம் -- அவர்கள், தீய சக்திகளை நம்புகிறார்கள் -- மக்களை நம்பவில்லை!

தமிழரசுக் கழகமும் -- முஸ்லிம் லீகும் -- தி. மு. கழகத்துடன் கொண்டிருக்கும் தோழமைக்கு ஊறு விளைவிக்க நினைக்கிறார்கள்; அப்போதாவது இந்த அரசைக் கவிழ்க்க முடியுமா என்ற நப்பாசை அவர்களுக்கு!

விவசாயிகளின் கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கும் மன்றாடியாரை மட்டுமல்ல -- அவருடைய தம்பியையும் எனக்குத் தெரியும் -- அண்ணனையும் தெரியும்; அந்தப் பெரிய மனிதர் உணவு அமைச்சராக இருந்தபோது கலெக்டரிடம் கொள்முதலைத் தர மறுக்க -- அந்த அதிகாரி முதலமைச்சரிடம் புகார் செய்ய -- அந்த இலாகாவே இவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டது!

இந்த இலட்சணத்தில் இருக்கின்ற மன்றாடியார் தலைமை தாங்கும் இயக்கமும் கிளர்ச்சியும் எப்படி வெல்லும்?

போராட்ட நேரத்தில் -- ஒரு சமயம் 'இந்து' பத்திரிகையில், கையில் தடியோடு நிற்கும் ஒரு போலீசுக்காரரின் படத்தைப் போட்டார்கள்; 'துப்பாக்கி என்ன ஆயிற்று' என்று சட்டமன்றத்தில் அண்ணா அவர்களிடம் கேட்டார்கள்.

"போராட்டக்காரர்களால் சேதப்படுத்தப்படும் பொருள்களைத் திரும்பப் பெற எங்களால் முடியும்; போராட்டத்தைத் தவிர்க்க துப்பாக்கியை ஏந்த எங்களால் முடியாது; ஏனென்றால், போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும் -- தொழிலாளர்களும் எங்களுடைய சதையோடு சதையாக -- இரத்தத்தோடு இரத்தமாக இருப்பவர்கள்" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்!

அப்படிச் சொன்னவரின் வாரிசான முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பார்த்துத்தான், 'அடக்குமுறைவாதி' என்கிறார் கல்யாணசுந்தரம்; யார் நம்புவார்கள் இதனை!

ஆசிரியர் போராட்டமானாலும் -- தொழிலாளர் போராட்டமானாலும் -- கூப்பிட்டுப் பேசியே பிரச்சினைகளைத் தீர்த்துவைத்த அரசு -- கலைஞர் அரசு!

'புது வரியே போடுவதில்லை' என்ற வைராக்கியத்துடன் கோட்டைக்குள் புகுந்த சாதாரண மக்களின் இந்த அரசுதான், இப்போது ஒரு காசு வரிபோட்டிருக்கிறது; இதற்காகவா ஒரு கிளர்ச்சி?

'மாலை நேரமாகிவிட்டால் மங்கை ஒருத்தி வெளியே வர முடியாது' என்றிருந்த நிலையை மாற்றவே ஒரு கிராமம்கூட விடாமல் மின்வசதி செய்யப்பட்டது; அதனால் உண்டாகும் நட்டத்தைச் சரிக்கட்டவே இந்த வரி; அதுவும் யாருக்கு -- கட்ட வசதி உள்ளவர்கட்கு -- தாங்கிக் கொள்ளும் சக்தி உள்ளவர்களுக்கும்தான் போடப்பட்டிருக்கிறது; இதற்கு என்ன போராட்டம்?

எது கிடைத்தாலும் எடுத்து அடிக்கின்ற அளவுக்கு ஆகியிருக்கிறார் -- காமராசர்! இந்த அரசைக் கவிழ்க்கக் கூட்டுச் சேர்ந்தவர்களெல்லாம், அவர் வீட்டில் ஒன்று கூடுகிறார்கள்!

இதைப் பார்க்கின்றபோது, 'காட்டுக் களாக்காயும் -- கண்கெட்ட ஒணானும், கோத்துக் குலவுதடா குணம் கெட்டான் வாசலிலே' என்று என்னுடைய பாட்டி அடிக்கடி பாடுகின்ற பாட்டுத்தான் எனக்கு நினைவு வருகிறது!

கோயம்புத்தூரில் இருக்கின்ற விவசாயிகளுக்காக இவர் ஏன் வரிந்து கட்டுகிறார் என்பதே எனக்குப் புரியவில்லை!

மன்றாடியார் தலைமை வகிக்கின்ற விவசாயிகள் சங்கம், ஊராட்சி மன்றத் தேர்தலில் -- நாடாளுமன்றத் தேர்தலில் எல்லாம் போட்டியிட்ட ஒரு அமைப்பாகும்; நிலப்பிரபுத்துவச் சங்கமான அதில், கல்யாண சுந்தரம் கட்சி எப்படி சேர்ந்திருக்கிறது? போதும் போதாதற்கு இந்திரா காங்கிரசு கூட்டுவேறு; 'விவசாயிகளுக்கு வரி விலக்கு வேண்டும்' என்கின்ற அவர்கள், மத்திய அரசு வசூலிக்கும் ஒன்றிரண்டு வளமான வரிகளை வசூலிக்கும் உரிமையை மாநில அரசுக்குத் தரச் சொல்லட்டும் -- இந்த வரியையே விட்டு விடுகிறோம்; அப்படிச் செய்வார்களா -- செய்யமாட்டார்கள்; 'எப்படியாவது இந்த அரசைக் கவிழ்த்துவிடவேண்டும்' என்கிற எண்ணம்தான் அவர்களுக்கு!

'தினமணி', 'இந்து' போன்ற பத்திரிகைகள் எழுதுவதைப் பாருங்கள் -- 'மேட்டுக் குடியினரால் விரும்பப்படாத தி. மு. கழக அரசை சாதாரண மக்களால் காப்பாற்ற முடியாது' என்பதுபோல் எழுதுகிறார்கள்.

சாதாரண மக்களால் இந்த அரசைக் காப்பாற்ற முடியுமா முடியாதா என்று பார்க்கத்தான் கிளர்ச்சி நடத்துகிறார்கள்.

மேட்டிலிருந்து மண் எடுத்தால்தான் பள்ளத்தைத் தூர்க்க முடியும்; அண்ணா வழி நடக்கும் கலைஞர் அரசு அதைத்தான் செய்கிறது; 'கழக அரசு வலுப்பெற எப்போதும் துணை நிற்போம்' என்று கூறிக் கொள்கிறேன்."

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலக முகவரி

ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெறவிருக்கும் மதுரை மாவட்ட தி. மு. க. 5-வது மாநாட்டு அலுவலகம் கீழ்க்காணும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ளது :--

மதுரை மாவட்ட தி. மு. க. மாநாட்டு அலுவலகம்
1-ம் பகுதி மங்கம்மாள் சத்திரம்,
மதுரை-1.

தொலைபேசி எண் :
31301

அஞ்சல் பிரிப்புக்கு அதிசய இயந்திரம்

மணிக்கு 9,000 கடிதங்களைப் பிரிக்கக்கூடிய ('சார்ட்டிங்') இயந்திரம் ஒன்று பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; இந்த இயந்திரம் தானியங்கு முறையில் இப்பணியைச் செய்யக்கூடியது

இலண்டனில் நடைபெறும் ஒரு காட்சியில் இந்த இயந்திரம் இடம் பெற்றுள்ளது.

இந்த எலக்ட்ரானிக் அஞ்சல் 'சார்ட்டிங்' இயந்திரம் தவிர, ஆளில்லாமல் இயங்கும் கலங்கரை விளக்கம் -- சுரங்கப் பணிகளை மேலே இருந்தவாறே கட்டுப்படுத்தும் கருவிகள் ஆகியவையும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

தண்ணீர் சப்ளை ஏற்பாடுகளைக் கவனிக்கும் தானியங்குக் கருவிகள், பாதாள இரயில் ஓட்டத்தைச் செவ்வனே இயங்கும் கருவிகள் ஆகியவை மேலும் சிலவாகும்.

மணிக்கு 1,400 டன் உதிரித் தானியத்தை -- மூட்டைகளாக அல்ல -- ஓர் இடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும் ஓர் இயந்திரம் கண்டுபிடித்துள்ளனர்; இதுவும் இக்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

சுற்றுலா வளர்ச்சிக்கு ரூ. 100 கோடி

பத்தாண்டுகளில் நிறைவேற்றும் வகையில் திட்டம்

ரூ. 1-கோடி செலவில் பொருட்காட்சி நிலையம் அமையும்

சென்னை, ஜூலை 4—

"தமிழ்நாட்டில் 'சுற்றுலா அரும்பொருட்காட்சி நிலையம்' ஒன்றை அமைப்பதற்குத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டிருக்கிறது! ரூ. 1-கோடி செலவில் சென்னையிலோ அல்லது மாமல்லபுரத்திலோ இது அமைக்கப்படும்"

என்று, சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி கடந்த வியாழனன்று இங்கு தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் கூறியதாவது :--

"தாய்லாந்து நாட்டிலுள்ள 'சுற்றுலா அரும்பொருட்காட்சி நிலைய'த்தின் அமைப்பில் இது உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் அமைக்கப்படும் இந்தக் காட்சி நிலையத்தில் கோவில்களின் உருவ அமைப்புகள் -- முக்கிய சுற்றுலா இடங்களைப் பற்றிய விளக்கக் குறிப்புகள் -- மாதிரிகள் -- அபூர்வ இசைக் கருவிகள் -- ஓவியங்கள் -- சிற்பங்கள் -- பனை ஓலைப் பொருட்கள் ஆகியவை காட்சிக்கு வைக்கப்படும்.

அவர் மேலும் கூறியதாவது :—

"தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைக்கப்பட்டு ஜூலை 1-ந் தேதியுடன் ஓராண்டுக் காலம் ஆகிறது; இதுவரையில், இந்தக் கழகம், தமிழ்நாட்டில் 11 மாவட்டங்களில் சுற்றுலா ஆய்வு நடத்தியுள்ளது; வடஆற்காடு, தென்ஆற்காடு மாவட்டங்களில் சுற்றுலா ஆய்வு ஜூலை மாத இறுதிக்குள் நடத்தி முடிக்கப்படும்.

ரூ. 100 கோடி திட்டம்

பின்னர் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக அடுத்த 10 முதல் 15 ஆண்டுகளில் நிறைவேற்றப்படுவதற்கு ரூ. 100 கோடிக்கு ஒரு பெரும் திட்டத்தை மாநிலத் திட்டக் குழுவில் இந்தக் கழகம் அளிக்கும்.

தமிழ்நாட்டில் 6 சுற்றுலா மாளிகைகளை இந்தக் கழகம் மேற்கொண்டுள்ளது; புதிதாக இரு [illegible] றது ஏற்காட்டில் மற்றோர் மாளிகை அடுத்த மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும்; குற்றாலம் —சிதம்பரம்— தூத்துக்குடி— ஒகனேக்கல்—மாமல்லபுரம் ஆகிய இடங்களிலும் இந்த மாளிகைகளைக் கட்டும் பணி துவங்கியுள்ளது.

உதகமண்டலம், கோடைக்கானல், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா மாளிகைகளில் மதுபானம் அருந்துவதற்கு 'பார்' ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது."

விவசாயிகள் கிளர்ச்சியில் கைதானவர்கள்

விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள்

சென்னை, ஜூலை 5—

விவசாயிகள் கிளர்ச்சியையொட்டிய வழக்குகளை விசாரிக்க கோவையில் இரண்டு முதல் வகுப்பு 'மாஜிஸ்திரேட் கோர்ட்'டுகள்' தனியே நிறுவுவதற்குத் தேவையான அனுமதியை அரசு ஏற்கனவே வழங்கியிருக்கிறது.

இந்தத் தனி நீதிமன்றங்களில் ஒன்று கோவையிலேயே இருக்கும்; மற்றொன்று மதுரைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

இதனையொட்டிய வழக்குகள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் மேலும் ஐந்து தனி (முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டு) நீதிமன்றங்களை நிறுவ அரசு அனுமதித்துள்ளது.

திருச்சிராப்பள்ளி, கடலூர், பாளையங்கோட்டை, வேலூர், சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய ஏழு இடங்களில் இந்தத் தனி நீதிமன்றங்கள் இயங்கிவரும்.

கொள்கையற்றவர்களின் முறையற்ற செயல்கள்

'அடக்குமுறை கதாநாயக'ரின் அடிப்படையற்ற கூற்று

சென்னை, ஜூலை 5—

"தி. மு. கழக ஆட்சி ஐந்தாண்டுக் காலமாக அமைதியாக – நிலையாக நடக்கிறதே – எதிர்க் கட்சியில் இருந்த ஒரு கட்சி ஏராளமான திட்டங்களைப் போட்டு நிம்மதியாக ஆட்சி நடத்துகிறதே -- மற்ற மாநிலங்கள் எல்லாம் ஒரே கட்சியின் ஆட்சியின் கீழ் வந்துவிட்டது – இந்தத் தமிழகத்தில் மாற்றம் ஏற்படவில்லையே என்ற எரிச்சல் காரணமாகத்தான் வேண்டாததோர் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறார்கள்!

"ஒரு காலத்தில் நாமும் போராடினோம்; 1962-ல் விலைவாசி உயர்வுப் போராட்டம் நடத்தினோம்; 'இந்த இடத்தில் இன்ன ஆட்கள் போராட்டம் நடத்துவர்' என்று குறிப்பிட்டுப் போராட்டம் நடத்தினோம்.

"ஆனால் இன்றைக்கு மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபாடான கொள்கை -- கட்டுப்பாடு இல்லாத போராட்டம் நடத்துகிறார்கள்; 'இந்த முறையற்ற செயலை எதிர்த்து மக்கள் சக்தியைத் திரட்டுவோம்' என்பதற்காகத்தான் இம்மாதிரி கொள்கை விளக்கப் பொதுக்கூட்டங்களை நாடெங்கும் தி. மு. கழகம் நடத்துகிறது.

"ஆட்சியின்மீது ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காகக் காழ்ப்பு -- கசப்பு உணர்ச்சியுடன் சில எதிர்க் கட்சியினர் பேசி வருகிறார்கள்; கொள்கை கிடைக்காவிட்டால் தனிப்பட்ட ஆட்களை விமர்சனம் செய்வார்கள்.

"20 ஆண்டுக்காலம் காங்கிரசு ஆட்சியில் எதிர்க் கட்சிகள் இருந்த நிலைக்கும் -- இன்றைக்கு அவர்களை மதித்து – அவர்கள் குரலைக் கேட்கும் நிலை ஏற்பட்டிருக்கும் நிலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்!

"வினோதமான கூட்டு சேர்ந்திருக்கிறார்கள்; நிலம் பிரபுக்களை ஒழிக்கக் கூறும் கம்யூனிஸ்டுக் கட்சியும் -- 'நில உச்சவரம்பைக் குறைக்காதே' என்று சொல்லும் சுதந்திராவும் ஒன்று சேர்ந்துள்ளன!

"12 அம்சத் திட்டத்திற்கு நாம் பதில் சொல்லிவிட்டோம்; அழைத்துப் பேசி வாதிட்டோம்; யாரையும் அலட்சியப்படுத்தவில்லை!

"இன்றைக்கு அவர்கள் நம்மைப் பார்த்து, 'அடக்குமுறை ஆட்சி' என்கிறார்கள்; யார் சொல்வது? – 'அடக்குமுறை கதாநாயகர்' பக்தவத்சலமா சொல்வது?"

-- அமைச்சர் செ. மாதவன்
(கொள்கை விளக்கக் கூட்டத்தில்)

தி. மு. கழகம் இல்லையேல் தமிழகத்துக்குக் கதி ஏது?

கலகமூட்டியே ஆட்சியைக் கைப்பற்றி விடலாம் என எண்ண வேண்டாம்

சனநாயகத்தில் நம்பிக்கையற்றவர்களைத் தமிழகம் நம்பாது

எதிர்க் கட்சிகளுக்கு அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் எச்சரிக்கை

சென்னை, ஜூலை 3

"மற்ற கட்சிகளுக்குத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 'சனநாயக வழிமுறைகளின் மூலம் ஆட்சிக்கு வர முடியும்' என்ற நம்பிக்கை கிடையாது; 'ஏதாவது கலவரத்தை ஏற்படுத்தி -- குழப்பமான சூழ்நிலையை உருவாக்கி மத்திய அரசின் மூலமாக இந்த ஆட்சியை அகற்ற முடியாதா' என்று நினைக்கிறார்களே தவிர, 'மக்களாட்சி முறை மூலம் தேர்தலில் நின்று வெற்றி பெறலாம் -- ஆட்சி அமைக்கலாம்' என்ற எண்ணம் நிச்சயமாகக் கிடையாது.

'தமிழ்நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகளுக்கு உண்மையிலேயே சனநாயக வழியில் நம்பிக்கை இருக்குமானால் அடுத்த தேர்தல் வரை பொறுத்திருக்க வேண்டும்; அந்தத் தேர்தலில் நின்று மக்கள் ஆதரவைப் பெற வேண்டும்; அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்களா என்றால், இல்லை; மாறாக, கலவரத்தை ஏற்படுத்தி அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் -- டில்லியை எப்படியாவது தலையிடச் செய்ய வேண்டும் -- என்று முயற்சிக்கிறார்கள்.

"ஆனால் தமிழ்நாட்டு மக்கள் இவர்களை ஏற்கனவே 1971 தேர்தலில் தூக்கி எறிந்துவிட்டார்கள்; இனியும் அவர்களை மக்கள் ஏற்கப்போவதில்லை"

என்று, போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்கள், கோடம்பாக்கத்தில் நடைபெற்ற கலைஞர் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

சென்னை 118-வது வட்ட தி.மு.க. சார்பில் நடந்த இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:--

"இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள மாநிலங்களிலேயே மிகச் சிறந்த முறையில் திறமையுடன் ஆட்சி நடத்திவருவது கலைஞர் அவர்கள் ஆட்சிதான் என்பதை வெளி மாநிலத்தில் உள்ள அரசியல் தலைவர் அனைவரும் மனதார [illegible] கிறார்கள்; அவர்கள் வேறு கட்சி முகாமிலே இருக்கின்ற காரணத்தால் வெளிப்படையாகப் பாராட்டத் தயங்கினாலும் தனிப்பட்ட முறையில் நம்மை பார்க்கும்போது பாராட்டுகிறார்கள்.

எந்த மாநிலத்திற்குச் சென்றாலும் கலைஞர் ஆட்சியின் சிறப்பைப் பாராட்டாத அரசியல் தலைவர்களே இல்லை என்ற அளவுக்குப் பாராட்டுகிறார்கள் -- போற்றுகிறார்கள்.

இதைத் தலைமையமைச்சர் இந்திரா புரிந்து கொண்டிருக்கிறார்கள்; ஆகவேதான், நமது தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கலந்துகொள்ள டெல்லி சென்றபோது அவரைத் தமது இல்லத்திற்கு அழைத்து விருந்துபசாரம் நடத்தித் தனிப்பட்ட முறையிலேயே பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

ஆனால் இங்கே இருக்கின்ற வாழ்விழந்த தலைவர்களும் வலுவிழந்த கட்சியினரும் கழக ஆட்சிமீது பழி சுமத்துகிறார்கள் அவதூறு கூறுகிறார்கள்; ஏசிப் பேசுகிறார்கள். அவர்களுக்குக் கலைஞர் அவர்களுக்குக் கிடைக்கின்ற பெருமையையும் புகழையும் பார்க்கின்றபோது நெஞ்சமெல்லாம் பொறாமையால் எரிகின்றது; அந்த எரிச்சல் தாங்காமல் பிதற்றுவதுபோல் பிதற்றித் திரிகிறார்கள்!

கலைஞர் அவர்களின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம் என்றால், அவர்தம் வாழ்நாளில் தமிழுக்காகவும் -- தமிழ்நாட்டு மக்களுக்காகவும் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றிய தொண்டினைப் பாராட்டவும், மேலும் இதுபோன்ற நல்ல பல தொண்டுகளை ஆற்ற அவருக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டவும் கொண்டாடுகிறோம்; அவர் செய்த நன்மைகளுக்கெல்லாம் நாம் காட்டும் நன்றி உணர்வே தானே தவிர, தனிப்பட்ட முறையில் அவருக்கு இதனால் என்ன இருக்கிறது?

ஆனால், எதிர்க் கட்சிகளுக்கு இது பொறுக்கவில்லை; பொறுமையால் வேகிறார்கள் -- குறை கூறுகிறார்கள்; குறை கூறும் இவர்கள் யோக்கியதை என்பது நமக்குத் தெரியாதா?

கலைஞர் அவர்கள் சென்ற ஆண்டு பிறந்தநாள் விழாவை பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் விழாவாகக் கொண்டாடும்படி நம்மையெல்லாம் கேட்டுக் கொண்டார்; இந்த எண்ணம் 20 ஆண்டுக் காலமாக ஆட்சி செய்த காங்கிரசுக் காரர்களுக்கு ஏன் ஏற்படவில்லை?

காமராசராகட்டும் -- பக்தவத்சலமாகட்டும் -- ராஜாஜியாகட்டும் -- இவர்கள் எல்லாம் முதலமைச்சர்களாக இருந்தார்களே -- இவர்கள் மனத்தில் ஏன் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றிய எண்ணம் ஏற்படவில்லை? அவர்கள் செய்திருந்தால் நாம் என்ன - அதை எதிர்த்துப் போராட்டமா செய்திருப்போம்? ஏன் செய்யவில்லை? அவர்களுக்கு அந்த எண்ணம் ஏற்ப [illegible] ளுக்குச் சிறிதளவும் இருந்ததே இல்லை!

தி. மு. கழகம் தமிழ் நாட்டு மக்களால் விரும்பி ஏற்றுக்கொண்ட இயக்கம்; ஆளும் கட்சியாக மக்களால் அமர்த்தப்பட்டிருக்கின்ற கட்சி; தங்களது எதிர்கால வாழ்வை வளப்படுத்த தி. மு. கழகத்தால்தான் முடியும் என்று உறுதியாக எண்ணி தங்களது அன்புக் கரங்களால் அரவணைத்துக் கொண்டிருக்கின்ற கட்சி; இதை எதிர்க் கட்சிகள் மறுத்துப் பயனில்லை!

அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தப் பாசறை, 'இந்த நாட்டில் அடிமட்டத்தில் அழுந்திக் கிடக்கின்ற ஏழை எளிய மக்களின் -- பாட்டாளி வர்க்கத்தினர் வாழ்வை வளப்படுத்திட வேண்டும்' என்பதற்காக ஏற்பட்டதாகும்; இதுதான மற்ற கட்சிகளுக்கும் -- திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வேறுபாடு!

தி. மு. கழகம் ஒன்றுதான் இந்த நாட்டு மக்களின் விருப்பத்திற்கேற்றவாறு, 'தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்' என்று என்று போராட முடியும்; 'இந்தி கூடாது' என்லு எதிர்ப்புக் குரல் எழுப்பிட முடியும்!

மற்ற கட்சிகள் எல்லாம் அகில இந்தியக் கட்சிகள்; அவைகளால் தமிழ்நாட்டு மக்களுக்காகப் பாடுபட முடியாது; டெல்லியில் இருக்கின்ற தலைமைப் பீடம் எதிர்ப்புத் தெரிவிக்குமானால் தமிழுக்காக அவைகள் போராட முடியாது; சேலம் இரும்புக்காக வாதாட முடியாது; 'தூத்துக்குடி சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டே ஆகவேண்டும்' என்று வலியுறுத்த முடியாது!

கட்சியின் தலைமைப்பீடம் வேறு ஒரு கருத்தைக் கூறுமானால், இங்குள்ளவர்கள் தங்களது கருத்தை மாற்றிக் கொண்டே ஆக வேண்டும்; தி. மு. கழகம் ஒன்றுதான் இந்த நாட்டு மக்களின் விருப்பத்தை -- தேவையை நிறைவேற்ற முடியும்.

அறிஞர் அண்ணா அவர்கள், 'தி. மு. கழகம் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதற்காக ஏற்பட்டதாகும்; எங்களை விட்டால் உங்களுக்கு வேறு கதி கிடையாது; உங்களை விட்டால் எங்களுக்கும் வேறு தொண்டு இருக்க முடியாது' என்று கூறினார்கள். இதை உணர்ந்துதான், தமிழ்நாட்டு மக்கள், 1967-ல் ஆட்சிப் பொறுப்பை அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்படைத்தார்கள்.

இன்றையத் தினம் கழகத்திற்கு அடுத்த பெரிய கட்சியாக -- எதிர்க் கட்சியாக -- யார் வருவது? காமராசர் -- கல்யாண சுந்தரம் -- மோகன் குமாரமங்கலமா என்பதைக் கணித்துக் கொள்ளவே போராட்டம் நடத்துகிறார்கள்!

காமராசர் ஏன் கோவையிலும் மற்ற இடங்களிலும் போராட்டத்தைத் தூண்டுகிறார்? காமராசர்தான் கட்சிக்கு மூன்று செயலாளர்களை நியமித்தார்; அவர்களில் சம்பத்தும் -- அனந்தநாயகியும் போய்விட்டார்கள்; செங்கல்வராயனும் காசிராமனும் இந்திரா கட்சிக்குத் தாவிவிட்டார்கள்; இப்போது, 'சிண்டிகேட் காங்கிரசுக்காரர்கள்' என்று தங்களைச் சொல்லிக் கொள்கின்றவர்கள், மறுவினாடி 'நாங்கள் அப்படி இல்லை -- இந்திரா கட்சி' என்கிறார்கள்; அப்படியானல் சிண்டிகேட் நிலை என்ன? எனவேதான், யார் யார் -- எங்கெங்கே -- நம் கட்சி என்பதைக் கணக்கு எடுக்கவே காமராசர் போராட்டத்தைத் தூண்டுகிறார்!

காமராசரைப் பார்த்துக் கலைஞர் அவர்கள் சொன்னார்கள் -- 'ஜெயப்பிரகாசரைப்போல, அரசியலை விட்டு ஒதுங்கியிருங்கள்; மணமான பிள்ளைகளிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு வீட்டிலுள்ள பெரியவர்கள் [illegible] வதுபோல் நீங்களும் இருங்கள்' என்றார்; ஆனல் இந்தியா முழுவதிலும் சிண்டிகேட்டைக் குழிதோண்டிப் புதைத்துவிட்ட காமராசர், கன்னியாகுமரியில் புண்ணிய ஸ்நானம் செய்துவிட்டு -- வெறுங்கையை வீசியபடி விருதுநகர் போகும்வரையில் அரசியலைவிட்டு விலகவேமாட்டார்!

நம் நாட்டில் மூன்று வகையான விவசாயிகள் உள்ளனர்; குத்தகைக்கு நிலம் உழும் விவசாயி -- முதல் ரகம்; 3 ஏக்கர் 5 ஏக்கர்வரை நிலம் வைத்துக் கொண்டு 40 பேர் அடங்கிய குடும்பத்தை வைத்துக்கொண்டு வாழும் விவசாயி -- இரண்டாம் ரகம்; மன்றாடியாரைப்போல் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் உள்ளவர்கள் மூன்றும் ரகம்.

இதில் எந்த ரக விவசாயிக்காகப் போராட்டம் நடத்துகிறார் மன்றாடியார்? 2,000 ஏக்கரை, 'மேய்ச்சல் தரை' என்று கூறி உச்சவரம்பிலிருந்து தப்பிக்கப் பார்க்கிறார்கள்!

மேய்ச்சல் தரை என்றால் அங்கு புல்தான் இருக்கும்; 2,000 ஏக்கரிலும் இப்போது நெல் இருக்கிறது; ஏன் மேய்ச்சல் தரையில் நெல் இருக்கிறது என்றால், 'நெல் தவிட்டுக்காகப் பயிரிடுகிறேன்' என்கிறார்; 'அதில் அரிசியும் இருக்கிறதே' என்றோம்; 'அது தவிட்டோடு ஒட்டி வருகிறது' என்றார்!

உச்சவரம்பிலிருந்து தப்பவே நிலப் பிரபுக்கள் போராட்டம் நடத்துகிறார்கள்!

ஏழை விவசாயிக்குப் பயிரிட நிலம் இல்லை; 2,000 ஏக்கரைத் தவிட்டுக்காகப் பயிரிடவும், 7,000 ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடவும் அனுமதிக்க முடியுமா? நில உச்சவரம்பிலிருந்து விதிவிலக்குத் தர முடியுமா?

நில முதலைகள் உச்சவரம்பிலிருந்து தப்புவதற்காக நிலங்களை மனைவிமீது எழுதிப் பார்த்தார்கள்; வீட்டிலுள்ள பிள்ளைகள்மீது பிரித்து எழுதிப் பார்த்தார்கள்; இன்னும் யார் யார் மீதோ எழுதினார்கள்; வீட்டில் உள்ள பிள்ளையார் மாடத்துக்கும் -- கிருஷ்ணன் படத்துக்கும் பூசைக்காக 50 ஏக்கர் எழுதினார்கள்; அதை இந்த அரசு அனுமதிக்க வேண்டுமா?

இதைக் கண்டு பொறுக்காத மன்றாடியார், 'கலாட்டா' செய்து இந்த அரசைக் கவிழக்க நினைத்தால் அது முடிகின்ற காரியுமா?"

"பயண நேரத்தைப் பாதியாகக் குறைத்து, விமானப் போக்குவரத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என்று கூறப்படும் கான்கார்டு விமானங்கள் மூலம் [illegible] னுக்குச் செல்ல 7 மணி நேரம் தான் ஆகும்.

இப்போது இப்பயணத்திற்கு 14 மணி நேரம் ஆகிறது; ஆனல் 1,400 மைல் வேக கான்கார்டு இதனை 7 மணி நேரத்தில் முடித்துவிடும்; சுருங்கிவரும் உலகம் மேலும் நெருங்கிவர இந்த விமானம் உதவுகிறது."

பிற்போக்குச் சக்திகளின் சூழ்ச்சியை முறியடிக்க அணி திரளுவோம்!

சேலம், ஜூலை 4—

"தமிழகத்தில் அமைந்த கழக அரசு நிலையாக இருப்பதையும் அதன் பயனாக நல்ல பல பணிகளை ஆற்றி மக்களின் நம்பிக்கைக்கும், நன்மதிப்பிற்கும் உரியாகி விட்டிருப்பதையும் எதிர்க் கட்சியினரால் சகித்துக்கொள்ள இயலவில்லை; எப்படியாவது இந்த அரசை வீழ்த்திவிடவேண்டும் என்பதே அவர்களது நோக்கமாக இருந்துவருகிறது.

"சமுதாய நீதியையும் -- சமதர்மத்தையும் நாட்டு மக்களுக்கு வழங்குவோம் என்பதுதான் ஒவ்வொரு தேர்தலின்போதும் நமது வாக்குறுதியாக இருந்து வந்துள்ளது. இந்த வாக்குறுதிக்கு மதிப்பளித்து 1967 தேர்தலின்போது மக்கள் நம்மிடம் ஆளும் பொறுப்பினை ஒப்படைத்தனர்.

"ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல் நமது வாக்குறுதிக்கு ஏற்ப சமுதாய நீதியையும், சமதர்மத்தையும் நிலைநாட்டுவதே நமது பணியாக இருந்து வருகிறது; இதனால் நம்மீது நம்பிக்கை கொண்ட மக்கள், 1971 தேர்தலின்போது முன்பைவிட அதிகம் பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பினை ஏற்கும் வாய்ப்பினை நமக்கு அளித்தனர்.

"மக்கள் நம்மிடம் திட நம்பிக்கை கொண்டிருப்பதையும், சமூக நீதியையும் சமதர்மத்தையும் நிலைநாட்டுவதாக நமது பணி அமைந்திருப்பதையும் கண்டு ஆத்திரமடைந்த பிற்போக்குச் சக்திகளும், சுயநல சக்திகளும் கழக அரசைக் கவிழ்த்துவிடப் பார்க்கின்றன. அதன் ஒரு கூறுதான் இன்று விவசாயிகளின் போராட்டம் -- பிற்போக்குச் சக்திகள் மற்றும் கழக எதிர்ப்பாளர்கள் ஆதரவுடன் நடைபெற்று வருகிறது.

"ஏழை எளிய மக்களுக்கு நன்மைகள் புரியும் பணியில் கழக அரசு தன்னை ஈடுபடுத்தியிருக்கிறது; இந்த அரசைக் கட்டிக் காப்பது நாட்டுமக்களின் கடமையாகும்; இவ்வாறு அவர்கள் அரசைக் கட்டிக் காப்பார்களேயானல், அது அவர்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்வதாகத்தான் பொருள்படும்.

'ஆகவே, அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை -- எளிய மக்கள் அனைவரும் ஓர் அணியாகத் திரண்டு -- கழக அரசுக்குத் துணை நின்று -- பிற்போக்குச் சக்திகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும்."

-- கே. ஏ. கிருட்டினசாமி, எம்.பி.
(கொள்கை விளக்கக் கூட்டத்தில்)

அரசியலில் ஓர் இரட்டை வேடம்

இந்திரா காங்கிரசு நடமாடவிடும் விசித்திரம்

முதலமைச்சர் கலைஞர் விளக்கம் -- கண்டனம்

சென்னை, ஜூலை 5—

"கூடுதலாக ரூ. 16 கோடிக்குப் புதிய வரிகளை விதிக்கும்படி மத்திய அரசு தமிழக அரசுக்கு யோசனை கூறியிருக்கிறது; நில வரிச் சலுகைகளை ரத்து செய்வதன்மூலம் ரூ. 3 கோடி வருவாய் கிடைக்கும் என்றும், நில வரிமீது உபரி வரி (சர்சார்ஜ்) விதிப்பதன்மூலம் ரூ. 1.60 கோடியும் -- பாசன வசதிகள்பெற்ற நிலத்தின்மீது உபரி வரி (சர்சார்ஜ்) விதிப்பதன்மூலம் ரூ. 3.50 கோடியும் -- மின்சாரம் பயன்படுத்துவோர் அனைவருக்கும் உபரி வரி விதிப்பதன்மூலம் ரூ. 7.20 கோடியும் -- நகர்ப்புறச் சொத்து வரிமீது உபரி வரி விதிப்பதன்மூலம் ரூ. 60 இலட்சமும் கிடைக்கும் என்று மத்திய அரசு நமக்கு யோசனை கூறி எழுதியிருக்கிறது; இது சம்பந்தமான குறிப்பும் வந்துள்ளது.

"அத்துடன், நில வரிமீது போடும் சர்சார்ஜை ஏக்கருக்கு ரூ. 10-லிருந்து ரூ. 20-ஆக உயர்த்தினால், ஓர் ஆண்டுக்குப்பிறகு மேலும் ரூ. 3 கோடி கிடைக்கக்கூடும்; ஆகவே, இந்தப் புதிய வரிகளினால், ஓராண்டிற்கு வருமானம் அதிகப்படியாக ரூ. 19 கோடி தமிழக அரசுக்கு வருமானமாகக் கிடைக்கும்' என்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு தெரிவித்திருக்கிறது; ஆனால், இந்த வரிகளை விவசாயிகள்மீது சுமத்தும் எண்ணம் எங்களுக்கு இல்லை; இந்த வரி விதிப்புப்பற்றி மேலும் பல விளக்கங்களைக் கேட்டிருக்கிறோம்.

"மத்தியிலே ஆளுகின்ற இந்திரா காங்கிரசுக் கட்சி, விவசாயிகள்மீது இந்த வரிகளைப் போடச் சொல்லுகிறது -- விவசாய வருமான வரியைத் தங்களுக்கு (மத்திய அரசுக்கு)க் கொடுத்துவிட வேண்டுமென்றும் கேட்டிருக்கிறது.

"ஆனால், இங்கே உள்ள இந்திரா காங்கிரசுக் கட்சியினர், புதிய வரிகள் போட்டதை எதிர்க்கின்றனர்; இப்படிப்பட்ட ஓர் இரட்டை வேடத்தை அரசியலில் நடமாடவிடுவது இந்திரா காங்கிரசின் (புதிய காங்கிரசின்) தலைமைக்கு நல்லது அல்ல!"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினார்; செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேலும் அவர் கூறியதாவது:--

மத்திய அரசு நிறுவனம் தமிழக அரசுக்கு விதித்துள்ள நிபந்தனை

"மத்திய அரசு நியமித்துள்ள கிராமப்புற மின்சார மேம்பாட்டு வாரியத்திடம் தமிழக அரசு கடன் கேட்டதற்கு, 'நீங்கள் மின்சாரத்தை சலுகை விலையில் கொடுக்கிறீர்கள்; வருமானம் வரும் துறையில் பணத்தைச் செலவு செய்வதில்லை; ஆகவே, இனிமேல் வருமானம் வரும் துறையிலேயே பணத்தைச் செலவிட வேண்டும்; மின் கட்டண விகிதங்களை உயர்த்த வேண்டும்; அத்துடன், மின்சார மேம்பாட்டு வகையில் எந்தச் செலவு செய்தாலும், செலவில் 100-க்கு ஓராண்டுக்கு ரூ. 11 வருமானம் வரக்கூடியதாக இருக்கவேண்டும்' என்று அவர்கள் மாநில அரசை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதன் அடிப்படையில், விவசாய மின்கட்டண விகிதத்தை, 12 காசாக உயர்த்திய பிறகுதான், மத்திய அரசின் அந்த வாரியம் தமிழக அரசுக்குக் கடன் தர ஒப்புக் கொண்டிருக்கிறது.

சோஷலிசக் கொள்கைக்கு எதிரானதே!

விவசாய வருமான வரியை தன்னிடம் கொடுத்துவிட வேண்டும் என்று மத்திய அரசு கேட்கிறது; ஆனால், அதை மத்திய அரசு எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், விவசாயிகள் நன்மைக்காக அந்த வரி மாநில அரசிடமே இருக்கவேண்டும் என்று நாங்கள் தெரிவித்திருக்கிறோம்.

இந்தப் போராட்டம் பற்றி மொத்தமாகச் சொல்லவேண்டுமானால், 'விவசாயிகள் போராட்டம்' என்ற பெயரில் சோசலிசக் கொள்கைக்கு விரோதமாக இந்தப் போராட்டம் நடைபெறுகிறது என்றே கருத வேண்டும்."

வியப்புக்குரிய ஒன்றல்லவா?

விவசாய வருமான வரித் திருத்த மசோதா, சட்டமன்றத்தில் பரிசீலிக்கப்பட்டபோது, 'மசோதாவைப் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடவேண்டும்' என்று கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு) ஒரு திருத்தத் தீர்மானம் கொண்டுவந்தார்; அந்தத் தீர்மானத்தை அவரே திரும்பப் பெற்றுக்கொண்டார்; அப்போது அவர் பேசும்போது, 'விவசாய வருமான வரிச் சட்டத்தில் விவசாயிகட்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதால், திருத்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்' என்று கூறினர்.

இப்போது கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்களும் -- சோஷலிசம் பேசுகின்ற இந்திரா காங்கிரசாரும் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது வியப்புக்குரியதாகும்.

'விவசாய வருமான வரி, $7\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் கீழ் கிடையாது' என்று இருக்கிறது; அது, ஏழை விவசாயிகளுக்கு நல்லதுதானே?"

சிரமமானது -- சிக்கலானது

கேள்வி:—"விவசாய மின்சாரக் கட்டணப் பிரச்சினையில், 5 ஏக்கர் நிலம் மட்டும் வைத்திருப்பவர்களுக்கு மின் கட்டணச் சலுகை அளிக்கலாம் -- என்று இடது கம்யூனிஸ்டுக்காரர்கள் சொல்கிறார்களே?"

முதல்வர்:—"விவசாய மின்கட்டணக் கணக்கை, ஏக்கர் முறையில் கணக்கிட முடியாது; 'யூனிட்' அடிப்படையில்தான் கணக்கிட முடியும்; சில இடங்களில் 5 ஏக்கருக்கு 400 'யூனிட்' வேண்டியிருக்கும்; அதே 5 ஏக்கருக்கு 1,000 'யூனிட்' மின்சாரமும் வேண்டியிருக்கும்; ஆகவே, விவசாய மின் கட்டணப் பிரச்சினையில், 5 ஏக்கர் என்று கணக்கிடுவது சிரமமானது -- சிக்கலானது"

கேள்வி:—"விவசாயப் பிரதிநிதிகளை அடிக்கடி நேரில் சந்தித்துப் பேசியிருந்தால், நலமாக இருக்கும் -- என்று சொல்லப்படுகிறதே?"

விவசாயக் கருத்தரங்கு

முதல்வர்:—"இதற்காகத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயக் கருத்தரங்கு நடத்தியிருக்கிறோம்; அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள்; இன்று மட்டும் அல்ல -- 1967-லிருந்து— நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த காலத்திலும் -- இப்போதும் கூட -- அந்தக் கருத்தரங்கு நடக்கத்தான் செய்கிறது; விவசாயிகள் கட்சி வேறுபாடின்றி கலந்து கொள்கிறார்கள்,

"போனவாரம், சேலம் -- தர்மபுரி ஆகிய 2 மாவட்டங்களிலும், இந்தக் கருத்தரங்கு நடந்திருக்கிறது; அமைச்சர்கள் மன்னை நாராயணசாமியும், இராசாராமும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்தந்தப் பகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத்தான் கலெக்டர் மூலம் உடனடியாக தீர்வுகாண முடிகிறது. மாநில அளவில் காணவேண்டிய பிரச்சினை என்றால், இலாகா மூலம் தீர்வு காணப்படுகிறது."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] வெளியிடப்பெற்றது.

நாவலர் 53-வது பிறந்த நாள்

விழாக் குழுத் தலைவர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர் அவர்களுடைய 53-வது பிறந்த நாள் விழா, ஜூலை 11-ம் நாள் வருகிறது

வழக்கம்போல் அவருடைய தொகுதித் தோழர்கள், தொகுதியெங்கும் தங்களுடைய அன்பைக் காட்டுகின்ற வகையில் விழா எடுப்பார்கள்; என்றாலும் -- எந்தத் துறையில் அமைச்சராக நாவலர் அவர்கள் இருக்கிறார்களோ அந்த கல்வித் துறையில் -- படிக்க வசதியில்லாமல் இருக்கும் ஏழை அனாதைக் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் -- எழுதுகோல்கள் -- கரும்பலகைகள் வழங்குவதென சென்னை மாநகரத் தோழர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட விழாக் குழுவினர் முடிவு செய்துள்ளனர்.

மேலும், நாவலர் அவர்களுடைய பெயரால் நிரந்தரமான அறக் கட்டளை ஒன்றை -- அவர் படித்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் -- நிறுவவும் யோசனை உள்ளது.

இரண்டிற்கும் ஆடம்பரமற்ற தன்மையில் -- அதே சமயம் பயன்படும் வகையில் நாவலர் அவர்களுடைய பெயர் நிலைக்க நகரப் பொதுமக்களும் -- கழகத் தோழர்களும் -- நாவலர்பால் பேரன்பு கொண்டவர்களும் -- நாவலர் அவர்களுக்குத் தங்கள் அன்பைக் காட்டும் வகையில் இயன்ற பொருளுதவியை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

நாவலர் அவர்களுக்குத் தங்கள் அன்பைக் காட்டும் வகையில் மாலை -- கைத்தறி ஆடைகள் அளிப்பதற்குப் பதிலாகப் பள்ளிச் சிறார்களுக்குப் பயன்படும் முறையில் நிதி உதவியையோ அல்லது பொருள்களையோ அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இராம. அரங்கண்ணல்
விழாக் குழுத் தலைவர்

அனைத்திந்தியச் சிறப்பு விருதுபெற்ற

புரட்சி நடிகருக்குப் பாராட்டு விழா

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில்
7--7--72 வெள்ளி மாலை 6-மணிக்கு
சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில்

தலைவர்:
முதலமைச்சர் கலைஞர்

பாராட்டுரை வழங்குவோர்:
கல்வியமைச்சர் நாவலர்
அமைச்சர் பெருமக்கள்
சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்
திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.
இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராசேந்திரன் எம்.பி.
அனைத்துக் கட்சித் தலைவர்கள், தென்னிந்திய – வடஇந்திய நடிக, நடிகையர் – திரைப்படக் கலைஞர்கள், மற்றும் பலர்.

நன்றியுரை:
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

மாலை 5.30 மணிக்கு மெல்லிசை நிகழ்ச்சி -- விழா முடிவில் இரவு 10 மணிக்கு புரட்சிநடிகர் நடித்த பல்வேறு படங்களில் சிறந்த காட்சிகள் சீரணி அரங்கில் திரையிடப்படும்.

தலைமைக் கழக அறிக்கை

கழக அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கு வேண்டுகோள்

தலைமைக் கழகத்தின் வேண்டுகோளுக்கேற்பவும், 'விவசாயிகள் சங்கம்' என்ற பெயரால் கழகத்துக்கும் -- கழக ஆட்சிக்கும் எதிர்மாகக் கிளர்ச்சி நடத்தும் நிலப் பிரபுக்களின் அரசியல் உள்நோக்கத்தை வெளிப்படுத்தும் வகையிலும் இந்தத் திங்கள் 2, 3 (ஞாயிறு, திங்கள்) ஆகிய நாட்களில் நாடெங்கும் நடைபெற்ற கொள்கை விளக்கக் கூட்டங்கள் குறித்த முழு விவரத்தையும் -- அதாவது, கூட்டம் நடைபெற்ற ஊர் -- கலந்து கொண்ட சொற்பொழிவாளர்களின் பெயர்கள் -- பேசப்பட்ட பேச்சுக்களின் சுருக்கம் ஆகியவற்றை 10—7—72-ம் நாளுக்குள் தலைமைக் கழகத்திற்குத் தவறாது அனுப்பிவைக்குமாறு நாடெங்கும் உள்ள கிளை -- வட்ட -- மாவட்டக் கழக அமைப்புக்களின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

என். வி. நடராசன்
துணைப் பொதுச்செயலாளர்

திருமணம்

'முரசொலி' அலுவலக ஊழியர் என். பி. ஆனந்தம் அவர்களின் மகள் செல்வி: பூங்கொடி -- செல்வன்: பன்னீர்செல்வம் திருமணம் 7—7—72 காலை 9 மணியளவில் சென்னை சி.ஐ.டி. நகர், ஐந்தாவது மெயின் ரோடு, 58 எண்ணுள்ள இல்லத்தில், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அமைச்சர் என். வி. நடராசன், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், முரசொலி மாறன் எம்.பி. மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

சி. பி. கனகசபை

நிகழ்ச்சிகள்

ஜூலை 5, 6: வடாற்காடு; 7: செஞ்சி; 9 காலை: சிதம்பரம்; மாலை: கொள்ளிடம்; 10: கொண்டல்; 11: ஒரத்தநாடு.

குடும்பக் கட்டுப்பாடு -- புதுவையின் நிலைமை

மத்திய ஆட்சிப் பகுதியான பாண்டிச்சேரியில் சென்ற ஏப்ரல்—மே மாதங்களில் மொத்தம் 123 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை அளிக்கப்பட்டது; 232 பெண்கள் குடும்பக் கட்டுப்பாட்டுச் சாதன முறைகளை ஏற்றுக் கொண்டனர்.